# உடையார்



## பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்

# உடையார்

# பாகம் 1 அத்தியாயம் 20

மனதை ஒருமுகப்படுத்தி உள்ளுக்குள் ஆழ அமிழ்ந்துவிடுவது என்கிற ஒரு தந்திரம் தான் உண்டு.

எவன் ஒருவன் மனதை ஒருநிலைப்படுத்தி, தனக்குள் அமிழ்ந்து தான்றறுப் போகிறானோ அவனுக்குச் சகல கலைகளும் கைகூடும்.

ஏன் தெரியுமா.... தான்றறுப் போகிற மனதிற்கு எது பற்றிய அபிப்ராயமும் இருக்காது. அது வெள்ளையாக இருக்கும். வெள்ளையான விஷயத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலையும், எதிரே வருகின்ற மனிதரின் மனமும், நடை, உடை, பாவனையும் ஏகப்பட்ட விஷயங்களைச் சொல்லும்.

அது தவிர,சூட்சமமாக பல்வேறு விஷயங்கள் மிகச் சாதாரணமாக அந்த மனிதர்கள் வெளியிடுவார்கள். உலகத்தில் பல்லாயிரக்கணக்கான தந்திரங்கள் இல்லை. உன்னுள் நீ அமர்வதே மிகப் பெரிய தந்திரம்.

அப்படி உள்ளுக்குள் அமர்ந்தவனுக்கு என்ன விதை எங்கே முளைக்கப் போகிறது என்று தெரியும். பூமி எப்போது நடுங்கும் என்று தெரியும். யாருக்கு, எந்த

இடத்தில் ருத்ர பூமி விதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியும். இவற்றில் எது தெரிந்தாலும் அதைப் பற்றி அபிப்ராயமும் கொள்வதில்லை.

எதைப் பற்றியாவது அபிப்ராயம் கொள்ளும்போது, அந்த அபிப்ராயம் கண்ணைத் தூசு போல மறைக்கிறது. அபிப்ராயத்தின் மீது அபிப்ராயம் விழுந்து உண்மையை பார்க்க மனது மறந்து போகிறது. தனக்குள் உள்ளவன் அபிப்ராயங்கள் கொள்வதில்லை. அவன் சுத்தமாக எப்போதும் எந்தக் கரையுமின்றி வெளிச்சமாக இருக்கிறான். வெளிச்சம் அவனுக்குச் சகல விஷயத்தையும் காட்டிக் கொடுக்கிறது.

# அத்தியாயம் 23

ஒன்று மட்டும் புரிந்துகொள் அருண்மொழி. இந்த உலகத்தில் உடம்பெடுத்தவர்கள் மட்டுமில்லை.

உடம்பில்லாத சூட்சும உருவங்களும் நம்மோடு நமக்கருகே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய செயல்களைக் கொண்டிருக்கின்றன. அதற்கேற்ற வண்ணம் அவைகளுடைய செயல்கள் அமைகின்றன. நம்முள் நல்லவர்கள், கெட்டவர்கள் இருப்பது போல அவைகளிலும் நல்லவர்களும், கெட்டவர்களும் உண்டு.

இந்த உலகத்தோடு சம்பந்தமில்லாமல், இன்னொரு உலகம் இந்த உலகத்திற்கு வெகு அருகிலேயே இந்த உலகத்தைச் சுற்றி இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த சக்திகளைக் கண்டுகொண்ட சிலர், மனிதர்களுக்கு இல்லாத ஆற்றல்கள் அவைகளுக்கு இருப்பதைக் கண்டு பிடித்து, அதன் லம் தன் சக மனிதர்களை மிரட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்த சூட்சும சக்திகளோடு தொடர்பு கொண்டு, அவைகளைத் தங்கள் வசப்படுத்தி, அவைகளுக்கு வேண்டியன கொடுத்து, தங்களுக்கு வேண்டியதை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இடைவிடாத வைராக்கியமும், இடைவிடாத பயிற்சியும் இருந்தால் இது எவருக்கும் சாத்தியம். ஆற்றங்கரையில் அருண்மொழியோடு நடந்து கொண்டிருந்த கருவூர்தேவர், அடிக்குரலில் அவனுக்கு விளக்கிக் கொண்டு வந்தார்.

பூமியின் புவியீர்ப்பு குறைந்த நாட்களில், சந்திரனின் வலிமை அதிகரிக்கின்ற நாட்களில், இந்த சூட்சும சக்திகளுக்குப் பலம் ஏற்படும். அப்போது அவைகளே கூட மனிதர்களோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்யும். அந்தச் சக்திகள் தாங்கள் உடலோடு இருந்தபோது வைத்துக் கொண்டிருந்த மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ள மனிதர்களை நாடுவதுண்டு. அவைகளுக்கு உடம்பு இல்லையெனினும் கடும் பசியிருக்கும். அதாவது அவைகளுக்கு மனம் செயல்படும். பசியெடுப்பது போன்ற ஒரு பிரமை ஏற்படும். தனக்குப் பசிக்கிறது. தனக்கு தூக்கம் வருகிறது என்றெல்லாம் உடம்போடு கூட இருந்த காலத்தில் ஏற்பட்ட நினைவுப் பதிவுகளின் காரணமாக அவைகள் அல்லலுறும்.

இந்த சூட்சும சக்திகளுக்குக் காமமும் ஏற்படுவதுண்டு. நீர் வேட்கையில் தவிப்பதுண்டு. சில சக்திகள் இறந்தபோது ஏற்பட்ட ஆற்றாமையால் அழுது கொண்டே இருக்கும். சில சக்திகள் எப்போதும் கடுங்கோபத்தில் இருக்கும்.

அருண்மொழி அவரையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.